**மே 5**

**மனன வசனம்**

**உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவார்கள். தானி 7:25.**

**ஆராய்ச்சிக்கு**

*ரோமர் 8:1; 7:15-25; ரோமர் 7:1-14; யோவான் 20:19-23; அப் 20:6,7; தானி 7:23-25; வெளி 13:1-17.*

மே 5 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 6

# பிரமாணத்தை ‘மாற்றுதல்’



தேவனுடைய கற்பனைகளை அறிந்திருந்தால் தான் கடைசிக்கால நிழ்வுகளைப் புரிந்துகொள்ள முடியும். குறிப்பாக, நான்காம் கற்பனை சொல்லும் ஏழாம் நாளாகிய ஓய்வுநாளுக்குக் கீழ்ப்படியவேண் டும். விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு உண்டு; ஆனாலும், இந்தக் கடைசி நாட்களில் ஏழாம்நாள் ஓய்வுநாள் உட்பட தேவனுடைய கற்பனைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிவது, நம் மெய்ப்பற்று யார் மேல்இருக்கிறது என்பதைக்காட்டும் ஒரு வெளிப்புறக் குறியீடாக இருக்கும்.

வெளி 13; 14 அதிகாரங்கள் சொல்கிற கடைசிக் காலநிகழ்வுகளின்மத்தியில் இந்த வேறுபாடு இன்னும் அதிக தெளிவாகத் தெரியவேண்டிய அவசியம் ஏற் பட்டுள்ளது. கடைசி நாட்களில் அரசியல்-மத நிர்வா கங்கள் ஒன்றுசேர்ந்து, பூமியின் குடிமக்கள் அனை வரையும் பொய்த் தொழுகைக்குக் கட்டாயப் படுத்தப் போகிறார்கள். இதற்கு நேர்மாறான காட்சியை வெளி 14:7 கூறுகிறது; ‘வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கின வரையே தொழுதுகொள்ளுங்கள்’ என்று தேவ பிள்ளைகள் அழைக்கப்படுகிறார்கள். அதாவது சிருஷ்டிகரைத் தவிர வேறு யாரையும் தொழக்கூடாது.

தேவனுடைய கற்பனைகள்பற்றியும், குறிப்பாக ஓய்வுநாள்பற்றியும், அந்தக் கற்பனையை மாற்று வதற்கு எடுக்கப்பட்ட முயற்சியில் சம்பந்தப்பட்ட விஷயங்கள்பற்றியும், கடைசிக்காலத்தில் வாழ்கிற நாம் இதிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம் என்பது பற்றியும் இந்த வாரம் ஆராய்வோம்.

*2018, மே 12 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, மே 6

## வாக்குத்தத்தம்

வேதாகமத்தின் மிகப்பெரிய ஒரு வாக்குத்தத்தம் ரோமர் 8:1. 'கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.' இதற்குமுன் ரோமரில் பார்க்கிற வார்த்தைகளுக்கு **'மகுடமாக'** இந்த வசனம் உள்ளது. இதற்கு முந்தைய வசனங்களில் பவுல் சொல்வதை ஆராய்ந்தால்தான் இந்த வசனம் தருகிற நம்பிக்கையைச் சிறப்பாகப் புரிந்துகொள்ள முடியும்.

**ரோமர் 8:1இல் பவுல் சொல்வது நமக்கு மிகுந்த ஆறுதலாக இருக்கும்விதத்தில், ரோமர் 7:15–25இல் அவர் எதைப்பற்றிப் பேசினார்?**

---

---

பவுல் ஒரு விசுவாசியாக, தன் நிலைமைபற்றித்தான் பேசுகிறார் என்று சிலரும், அப்படி இல்லையென வேறுசிலரும் வாக்குவாதம் செய்கிறார்கள். பாவத்தின் நிஜத்தன்மைபற்றி அவர் இங்குப் பேசுகிறார் என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. பவுல் இங்கு விவரிக்கும் போராட்டத்தை ஏதாவது ஒருவிதத்தில் அனுபவிக்காதவர்கள் யாராவது இருக்கமுடியுமா? மாம்சத்தின் இழுப்பையும், அதில் 'வாசமாயிருக்கிற பாவத்தையும்' உணராதவர் யார்தான் இருக்கமுடியும்? ரோமர் 7:17. அதுதானே தாங்கள் செய்யக்கூடாதென அவர்கள் அறிந்திருப் பதைச் செய்யவைக்கிறது; தாங்கள் செய்யவேண்டியதைச் செய்யவிடாமல் தடுக்கிறது. சரியானதைச் செய்யவேண்டுமென்கிற விருப்பம் இருந்தும் தவறா னதைச் செய்துவிடும் அனுபவம் யாருக்குத்தான் இல்லை? தேவனைத் தேடுகிற ஒவ்வொருவரும் ஓயாமல் சந்தித்தாகவேண்டிய ஒரு பிரச்சனையைத்தான் இங்கு ஆணித்தரமாக அவர் கூறுகிறார்.

அதனால்தான், 'நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?' என்று கேட்கிறார். ரோமர் 7:24. இயேசு தான் இதற்குப் பதில். இயேசுவுக்குள்ளாக வாழ்கிற விசுவாசி, கிருபையால் ஆவியின்படி நடக்கும்போது, அவருக்கு 'ஆக்கினைத்தீர்ப்பில்லை' எனும் வாக்குறுதி இருக்கிறது. விசுவாசிகளுக்குப் போராட்டம் உண்டு, பாவச் சோதனைகள் வருகின்றன, பாவம் நிஜமானது. ஆனால் இயேசுவுக்குள் விசு வாசமுள்ளவர்களாக வாழ்கிறவர்களை நியாயப்பிரமாணம் குற்றவாளிகளாகத் தீர்க்கமுடியாது; அவர்கள் கீழ்ப்படிவார்கள். 'மாம்சத்தின்படி' நடவாமல், ஆவியின்படி நடக்கப் பழகுகிறார்கள்.

ரோமர் 7:15–25ஐ மீண்டும் வாசியுங்கள். பவுல் இங்குச் சொல்வது உங்களுடைய வாழ்க்கைக்கு எவ்வளவுக்குப் பொருந்தும்? ரோமர் 8:1எவ்வாறு அற்புதமான ஒரு வாக்குறுதியாக இருக்கிறது?

---

---

## பாவமும் நியாயப்பிரமாணமும்

கிறிஸ்தவர்களுக்கும்கூட பாவப்பிரச்சனை நிஜமான ஒன்றாக இருக்கிறதென ரோமர் 7:15-25இல் பார்த்தோம். இதற்கு முந்தைய வசனங்களில் நியாயப்பிரமாணம்பற்றி பவுல் பேசுகிறார்; பாவம் எங்கும் பரவியிருப்பதையும், அது எவ்வளவு கொடியதென்பதையும் அவை காட்டுகின்றன.

**நியாயப்பிரமாணமும் பாவமும் எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளன? ரோமர் 7:1–14. நியாயப்பிரமாணத்தால் நாம் இரட்சிக்கப்பட சாத்தியமே அல்லவென்று இவ் வசனங்கள் எவ்வாறு காட்டுகின்றன?**

இங்கு இரண்டு முக்கியக் கருத்துகளை பவுல் வலியுறுத்துகிறார்.

**முதலாவது**, நியாயப்பிரமாணம் பிரச்சனைக்குரியதல்ல என்கிறார். நியாயப்பிரமாணம் 'பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது.' பாவமே பிரச்சனைக்குரியது. அது மரணத்தைக் கொண்டுவருகிறது. பாவமும் மரணமும் பிரச்சனைக்குரியவைகளென நியாயப்பிரமாணம் சுட்டிக்காட்டுகிறது.

**இரண்டாவது**, பாவத்திலும் மரணத்திலுமிருந்து நம்மை இரட்சிப்பதற்கு நியாயப்பிரமாணம் பெலனற்றதாக இருக்கிறது. பாவத்தையும் மரணத்தையும் அது மேலும் தெள்ளத்தெளிவாகக் காட்டமுடியுமே தவிர, அந்தப் பிரச்சனைக்கு எந்தத் தீர்வையும் தரமுடியாது.

இந்த வசனங்களின் அர்த்தம் புரியாதவர்தான் பத்துக்கற்பனை ஒழிந்து போயிற்றென்று சொல்லுவார். நியாயப்பிரமாணம் ஒழிந்திருக்குமானால், பவுல் இங்குச் சொல்வது அர்த்தமுடையதாக இருக்காது. பாவம் இருப்பதையும், அதனால் நற்செய்தி தேவைப்படுவதையும் நியாயப்பிரமாணம்தான் சுட்டிக் காட்டுகிறது என்பது அவருடைய வாதம். ''ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப் பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே.'' ரோமர் 7:7.

**ரோமர் 7:13ஐ கவனமாக வாசியுங்கள். நியாயப்பிரமாணம்பற்றியும், அதன் அவசியம்பற்றியும் பவுல் என்ன சொல்லுகிறார்?**

நியாயப்பிரமாணம் அல்ல, பாவம்தான் மரணத்தைக் கொண்டுவருகிறது. பாவம் எவ்வளவுக்குக் கொடியது என்பதை நியாயப்பிரமாணம் காட்டுகிறது. நியாயப்பிரமானம் பாவத்தைச் சுட்டிக்காட்டுவதால், அது நன்மையானது. கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்தவர்களாக நாம் 'புதுமையான ஆவியின்படி' ஊழியம்செய்யவேண்டும். ரோமர் 7:6. அதாவது, இரட்சிப்பிற்காக இயேசுவின் நீதியையும் புண்ணியங்களையும் நம்பி, இயேசுவோடு விசுவாச உறவுள்ளவர்களாக வாழ்கிறோம். ரோமர் புத்தகத்தின் முந்தைய வசனங்கள் இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்துகின்றன.

தேவனுடைய கிருபை உங்களுக்கு எவ்வளவு தேவை என்பது நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சித்தால்தான் தெரியும். நீங்கள் அதைக் கற்றுக்கொண்டீர்களா?

செவ்வாய், மே 8

## ஓய்வுநாள் ஞாயிற்றுக்கிழமைக்கா?

பிற சபைகளைச் சேர்ந்த சகோதர சகோதரிகள், ‘‘நியாயப்பிரமாணம் ஒழிந்து போயிற்று; நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம்’’ என்று சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். உண்மையில் அவர்களுடைய வாதமெல்லாம் நான்காம் கற்பனை ஒழிந்து விட்டது என்பதுதான். பலர் இப்படிக்கூடச் சொல்வதில்லை. மாறாக, இயேசு உயிர்த்தெழுந்த நாளை மகிமைப்படுத்துவதற்காக, ஏழாம்நாளான சனிக் கிழமையின் இடத்தை முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை பிடித்துவிட்டதாகச் சொல்கிறார்கள். அதை நிரூபிக்க வசனங்கள் இருப்பதாகவும் நம்புகிறார்கள்.

பழைய ஏற்பாட்டில் ஏழாவது நாளாக இருந்த ஓய்வுநாள், புதிய ஏற்பாட்டி லும் முதலாம் நாளாக மாற்றப்பட்டுவிட்டதாக பின்வரும் புதிய ஏற்பாட்டின் சில வசனங்கள் சுட்டிக்காட்டுகிறதென கிறிஸ்தவர்கள் பலர் நினைக்கிறார்கள். இந்த வசனங்களை வாசிப்போம்; ஏதாவது நாள் மாற்றப்பட்டதைக் குறித்து இந்த வசனங்கள் பேசுகின்றனவா? மாற்றம்பற்றிய எந்தவிதக்கட்டளையையும் கொடுக்காமல், ஒரு குறிப்பிட்ட நாளில் நிகழ்ந்த சம்பவம்பற்றி அவை சொல் கின்றனவா?

**அந்த அறையில் சீடர்கள் எதற்காகக் கூடியிருந்ததாக யோவான் 20:19–23 கூறுகின்றது? சிலர் சொல்வதுபோல, இயேசு உயிர்த்தெழுந்த நாளில் ஆராதனை செய்வதற்காகவா அங்குக் கூடியிருந்தார்கள்?**

---

**ஓய்வுநாளானது வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப் பட்டதாகச் சுட்டிக்காட்டுகிற ஏதாவது ஒரு விஷயம் அப் 20:6,7இல் காணப்படு கிறதா? அப் 2:46.**

---

**1கொரி 16:1–4 ஐ வாசியுங்கள். வாரத்தின் முதல் நாளில் வீடுகளில் காணிக்கை சேகரிக்கும்படி மட்டும்தான் இப்பகுதி சொல்கிறது; ஞாயிற்றுக்கிழமைக்கு ஓய்வுநாள் மாற்றப்பட்டதாக எவ்விதத்திலாவது இந்த வசனம் கூறுகிறதா?**

---

ஏழாம் நாள் ஓய்வுநாள் வாரத்தின் முதல் நாளுக்கு மாற்றப்பட்டதென்கிற உபதேசத்தை நிரூபிக்க அவர்கள் பயன்படுத்ததுகிற ‘ஆதாரவசனங்கள்’ இப்படிப்பட்டவைதாம். ஏதோ ஒரு காரணத்திற்காக, விசுவாசிகள் ஒன்றுகூடி வந்த தருணங்களைத்தாம் இந்த வசனங்கள் சொல்கின்றனவே தவிர, ஏழாம் நாள் ஓய்வுநாளுக்குப் பதிலாக வாரத்தின் முதல் நாளில் ஆராதனை நடந்ததாக இவை எதுவுமே சொல்லவில்லை. கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையில் ஆராதனைசெய்வதற்கு பல நூற்றாண்டுகளாகக் கூறிவந்த கதையையே இந்த வசனங்களை வைத்து இப்போதும் சொல்லிவருகிறார்கள். உண்மையில் அந்த வசனங்கள் சொல்லாத ஒன்றை அவர்கள் சொல்கிறார்கள்.

## புதிய ஏற்பாட்டில் ஏழாம் நாள்

ஓய்வுநாளின் இடத்தை ஞாயிற்றுக்கிழமை பிடித்ததாக பலர் காட்டுகின்ற வசனங்கள் உண்மையில் அப்படிச் சொல்லவே இல்லை. புதிய ஏற்பாட்டில் ஏழாம்நாள் ஓய்வுநாளைச் சுட்டிக்காட்டும் வசனங்கள், பத்துக்கற்பனைகளில் ஒன்றாக அது கடைப்பிடிக்கப்பட்டு வந்ததையே காட்டுகின்றன.

**கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்னரும் பின்னரும் ஏழாம்நாள் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டதைப்பற்றி லூக்கா 4:14–16; 23:55,56 என்ன சொல்லுகின்றன?**

---

---

கிறிஸ்துவோடு இருந்த பெண்கள், 'கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.' லூக்கா 23:56. சீனாயில் கற்பலகையில் எழுதித்தரப்பட்ட நான்காம் கற்பனைதான் அது. அவர்கள் இயேசுவோடு இருந்த சமயங்களில் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குப் போதித்திருந்தார்; ஓய்வுநாள் கற்பனையும் அதில் அடங்கும்; கற்பனைகளில் மாற்றம் ஏதும் செய்ததாக அவர் எங்கும் சொல்லவில்லை. கிறிஸ்து தம் சீடர்களிடம், 'நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்' என்று சொன்னார். யோவான் 14:15. அவர்தாமே கற்பனைகளைக் கைக்கொண் டார்; ஏழாம் நாள் ஓய்வுநாளும் அதில் அடங்கும். ஓய்வுநாளின் இடம் ஞாயிற்றுக்கிழமைக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், அந்தப் பெண்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்.

**ஏழாம்நாள் ஓய்வுநாளை ஆசரிக்கவேண்டும் என்பதற்கு அப் 13:14,42–44; அப் 16:12,13 எவ்வாறு ஆதாரங்களாக இருக்கின்றன? முதல் நாளில் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டது என்பதற்கு இவை ஏதாவது ஆதாரம் தருகின்றனவா?**

---

---

ஓய்வுநாளானது ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டதற்கு இந்த வசனங்களில் எந்த ஆதாரமும் இல்லை. மாறாக, இயேசுவை விசுவாசித்த ஆதிகால விசுவாசிகள் ஏழாம் நாள் ஓய்வுநாளை ஆசரித்ததை இந்த வசனங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

ஜெபாலயத்திற்கு வெளியே நடந்த ஒரு நிகழ்வுபற்றி அப் 16:13 சொல்கிறது. ஓர் ஆற்றினருகே விசுவாசிகள் கூடினார்கள்; அங்கே போய் ஜெபிப்பது சிலருடைய 'வழக்கமாக' இருந்தது. ஓய்வுநாள் ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டிருந்திருக்குமானால், நிச்சயம் இந்த வசனம் அதைச் சொல்லியிருக்கும்.

ஏழாம்நாள்தான் ஓய்வுநாள் என்பதை ஞாயிறு ஆசரிப்புக்காரர்களுக்கு அன்பாக, குற்றப்படுத்தாமல் எடுத்துச்சொல்ல சில வழிகளைக் கூறுங்கள்.

**வியாழன், மே 10**

## ஓய்வுநாளை மாற்ற எடுக்கப்பட்ட முயற்சி

தேவனுடைய நியாயப்பிரமாணமான பத்துக்கற்பனைகளை இன்றும் நாம் கடைபிடித்தாகவேண்டும். யாக் 2:10-12. ஏழாம்நாள் ஓய்வுநாளும் அதில் அடங்கும். ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்புக்கு வேத ஆதாரம் எதுவும் இல்லை; ஆனால், கிறிஸ்தவர்கள் பலர் ஞாயிற்றுக்கிழமை ஆராதனை செய்வது ஏன்?

பாபிலோன், மேதிய-பெர்சியா, கிரேக்கம், ரோம் ஆகிய நான்கு சாம் ராஜ்யங்கள் எழும்புவதுபற்றி தானியேல் 7 கூறுகிறது. ரோம சாம்ராஜ்யத்தின் கடைசிக்கட்டத்தில், அந்த ராஜ்யத்திலிருந்து ஒரு சிறிய கொம்பு எழும்பியதாகச் தானி 7:8 சொல்கிறது. அதுவும் ரோம ராஜ்யத்தின் ஒரு பகுதிதான்; ஆனால் பின்னான காலக்கட்டத்தில் எழும்புகிறது. ரோமிலிருந்து நேரடியாக எழுந்து, இன்றுவரை இருக்கும் அந்த வல்லமை போப்புமார்க்கம் தவிர வேறு எதுவாக இருக்கமுடியும்? 1600களில் தாமஸ் ஹாப்ஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்: ‘இந்தத்திருச்சபையின் அதிகாரம் எங்கிருந்து உண்டானது என யோசித்தால், மாண்டுபோன ரோம சாம்ராஜ்யத்தின் ஆவியாக, அதன் கல்லறையின்மேல் வீற்றிருந்து அதிகாரம் செலுத்துவதைக் காணலாம்.’

**ஞாயிறு ஆசரிப்பு முதலில் எவ்வாறு உருவானது என்பதைப் புரிந்துகொள்ள தானியேல் 7:23–25 வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன?**

பிரமாணத்தை மாற்ற அந்தச் சின்ன கொம்பு **‘திட்டமிட்டதாக’** மூலபாஷையான அரமெய்க் மொழியில் வசனம் 25 சொல்கிறது. தேவ பிரமாணத்தை மாற்றும் அதிகாரம் ஏதாவது பூலோக வல்லமைக்கு இருக்கிறதா?

மிகச்சரியான விபரங்கள் வரலாற்றில் புதைந்து தெளிவில்லாமல் இருக்கின்றன. ஆனாலும், போப்புமார்க்கத்தின்கீழ்தான் ஏழாம்நாள் ஓய்வுநாளின் இடத்தை ஞாயிறு ஆசரிப்பு பிடித்துக்கொண்டது. உறுதியாகக் காலூன்றிவிட்ட அந்தச் சடங்கை புரொட்டஸ்ட்ன்ட் சீர்திருத்தம் இருபத்தோராம் நூற்றாண்டு வரையிலும் உயிரோடு வைத்திருக்கிறது. இன்று பெரும்பாலான புரொட்டஸ்டண்டுகள்வேதாகமகற்பனையின்படிஏழாம்நாளில்ஆசரிப்பதற்குப்பதிலாக, மனிதகற்பனையின்படி வாரத்தின் முதல் நாளை ஆசரித்துவருகிறார்கள்.

**வெளி 13:1–17ஐ தானியேல் 7:1–8,21,24,25 உடன் ஒப்பிடுக. கடைசிக்கால நிகழ்வுகளை நாம் புரிந்துகொள்ள இரண்டிலும் உள்ள பொது உருவகம் என்ன?**

ரோமின் போப்புமார்க்கக் காலக்கட்டத்தைக் குறிக்கும் உருவகம் உட்பட, தானியேல் சொல்கிற உருவகத்தை வெளிப்படுத்தல் புத்தகம் நேரடியாகவே பயன்படுத்தி, கடைசிக்கால உபத்திரவம்பற்றிப் பேசுகிறது. வெளிப்படுத்தல் சொல்கிற அரசுகளின் கட்டளைப்படி ‘தொழுதுகொள்ள’ மறுப்போருக்கு அந்த உபத்திரவம் வர இருக்கிறது.

யாத் 20:11இல் நான்காம் கற்பனை சொல்வதை வெளி 14:7 வலியுறுத்துகிறது. தொழுகை சம்பந்தமாக கடைசிக்காலத்தில் எழும்பும் இக்கட்டில், ஓய்வுநாள் ஒரு முக்கியக் காரணியாக இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள இது எவ்வாறு உதவுகிறது?

## மேலும் படிக்க:

பரலோகத்தில் தேவனோடு யுத்தம்செய்த அதே வலுசர்ப்பமாகிய சாத்தான் தான், 'தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்' தேவபிள்ளைகளோடு பூமியில் யுத்தம்செய்கிறது. வெளி 12:7,17; 13:2,4.சாத்தான்தானே தொழுகையைப் பெறுகிறான். வெளி 13:4. எனவே, பரலோகத்தில் தேவனுக்கு எதிராகத் தொடங்கிய யுத்தத்தை பூமியிலும் தொடர அவன் விரும்புகிறான். தேவபிரமாணத்தை தாக்கு வதன்மூலம், அவன் தேவனைத் தாக்குகிறான்.

தேவன் வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தவர் என்றும், அதனால் அனைத்துப் பொய்தேவர்களையும்விட வித்தியாசமானவர் என்றும் நான்காம் கற்பனை அவரை வெளிப்படுத்துகிறது. தேவனே ஜீவனின் ஆதாரம்; தொழுகைக்கு உரியவர் என்கிற எண்ணத்தை எப்போதும் மனிதர் மனதில் பசுமையாக வைத்தி ருக்கும்படி நான்காம் கற்பனையைக் கொடுத்தார். மனிதர்கள் தேவன்மேல் மெய்ப் பற்று வைக்காமல், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமலிருக்க வேண்டு மென்று சாத்தான் நினைக்கிறான்; அதனால்தான் தேவனே சிருஷ்டிகரெனச் சுட்டிக் காட்டும் கற்பனைக்கு எதிரான அனைத்து முயற்சிகளிலும் இறங்கியிருக்கிறான்.

தேவன் 'வானங்களையும் பூமியையும்' சிருஷ்டித்தவர்; அதனாலேயே அவரைத் தொழுகிறோம். அவருடைய படைப்பாளுமையின் சின்னமாக ஏழாம் நாள் ஓய்வுநாள் இருக்கிறது. ஆதி 2:1-3. தேவனுடைய அதிகாரத்தை எதிர்ப்பதற் காக, அவருடைய அதிகாரத்திற்கு அடிப்படைச் சின்னமாக விளங்கும் ஏழாம் நாள் ஓய்வுநாளை அவன் தாக்குவதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

கடைசி நாட்களில், தேவன்மேல் மெய்ப்பற்றுள்ளவர்களாய் அவர்மேல் அசையா உறுதியுடன் இருக்கும் ஒரு கூட்ட மக்களை பூமியில் தேவன் வைத்திருப்பார். அவருடைய அனைத்து கற்பனைகளுக்கும் கீழ்ப்படிந்து அவர்கள் தங்கள் மெய்ப் பற்றைக் காட்டுவார்கள். தேவன்மட்டுமே சிருஷ்டிகர் என்றும், அதனால் அவரே தொழுகைக்கு பாத்திரர் என்றும் சுட்டிக்காட்டுகிற கற்பனையும் அவற்றில் அடங்கும்.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *பாவத்தின் நிஜத்தை ஒத்துக்கொள்ளும் சிலர், தேவனுடைய பிரமாணம் ஒழிந்து விட்டதாகவும் சொல்கிறார்கள்; இதிலுள்ள பிரச்சனை என்ன? இது எவ்விதத்தி லாவது பகுத்தறிவுள்ள பேச்சாக இருக்கமுடியுமா?*

2. *ஓய்வுநாளின் இடத்தை ஞாயிற்றுக்கிழமை பிடித்துக்கொண்டதாக யாராவது உங்க ளிடம் விவாதம் செய்திருக்கிறார்களா? நீங்கள் என்ன விளக்கம்சொன்னீர்கள்? பயன் இருந்ததா? ஏழாம் நாள் ஓய்வுநாளைக் கைக்கொள்வது, கிரியையால் இரட் சிக்கப்பட முயல்வது என்கிற வாதத்திற்கு நீங்கள் என்ன பதில்சொல்லமுடியும்?*

3. *ஓய்வுநாள்பற்றி மற்றவர்களிடம் பேசும்போதும், கடைசிக்கால நிகழ்வுகளுக்காக நாம் ஆயத்தமாகும்போதும், ஓர் உண்மையை மனதில் வைத்திருக்கவேண்டும்.* **'மிருகத்தின் முத்திரை'** *சம்பந்தப்பட்ட சவால்கள் இனிதான் உண்டாகப் போகின் றன என்பதுதான் அந்த உண்மை. இது ஏன் முக்கியமானது?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,
ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*